DEPOSITION OF WITNESS

(Chapter X of Civil Procedure)

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM

OS. No. 55/2017

Deposition of witness for plaintiff/petitioner/defendants/respondents – PW5

| | | |
|---|---|---|
| Name | : | செய்யது அகமதுசாகிபு |
| Father/Husband Name | : | நைனா முகம்மது |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

29.06.2022

முதல் விசாரணை–

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு சாட்சி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை நிருபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

(17.10.1985 தேதியிட்ட பரிவர்த்தனை பத்திரத்தை குறியீடு செய்யுமாறு வாதி தரப்பில் வேண்டுகோள்விடப்பட்டது. 4 முதல் 8 மற்றும் 10 முதல் 13 மற்றும் 18, 19, 21 ஆகிய பிரதிவாதிகள் தரப்பில் 17.10.1985 தேதியிட்ட பரிவர்த்தனை பத்திரத்திற்கு தகுந்த முத்திரைக்கட்டணம் செலுத்தப்படவில்லை என்றும் அந்த ஆவணம் இந்திய பதிவுச்சட்டம் பிரகாரம் பதிவு செய்யப்படவில்லை என்றும் அந்த ஆவணத்தை குறியீடு செய்ய முடியாது என்றும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. மேற்கண்ட ஆவணத்தை குறியீடு செய்யலாம் என்று வாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ள வாதத்தை நீதிமன்றம் ஏற்களாமா இல்லையா என்பது குறித்து முடிவு செய்வதற்கு வாதி தரப்பில் தனியாக மனு தாக்கல் செய்வதற்கு உத்தரவிட்டு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)